**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No.146/2018**
**Deposition of witness for prosecution –PW–11**

| | | |
|---|---|---|
| Name | : | பஞ்சா |
| Husband Name | : | மனோகரன் |
| Village | : | தொண்டி |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | உதவி மேலாளர் |
| Religion | : | |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 30th day of September 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி திருவாடானை கிளையில் சரக மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி திருவாடானை கிளையில் காசாளராக பணிபுரிந்து வந்தேன். அப்போது எங்களது வங்கி கூட்டுறவு சங்கத்தில் 13 சங்கங்கள் எங்களுடைய கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்தது. 06.10.2015 ல் அரசூர் தொடக்க வேளாண்மை கடன் கூட்டுறவு சங்கத்தில் எதிரி ராஜன் எழுத்தராகவும் இறந்து போன எதிரி லிங்கப்பன் செயளாலராகவும் பணிபுரிந்து வந்தார்கள். 06.10.2015 ம் தேதி சேமிப்பு கணக்கு மூலம் ஒரு காசோலை ரூ.2,00,000/–மும் விவசாய நகை காசு கடன் மூலம் ரூ.2,00,000/–ஒரு காசோலையும் ஆக மொத்தம் ரூ.4,00,000/–மும் எதிரி ராஜன் பெற்றிருந்த நிலையில் அன்றைய தினமே மேற்படி ரூ.4 லட்சத்தை கடன் கணக்கில்எங்களுடைய வங்கியில் வரவு வைக்கப்பட்டது. அதன்பின் 14.10.2015 ம் தேதி விவசாய நகை காசு கடன் மூலம் ரூ.2 லட்சம் காசோலை மூலமாக ரொக்கமாக எதிரி ராஜன் எடுத்து சென்றுள்ளார். எதிரிக்கு எடுத்த அந்த வங்கி காசோலை எண் 227426, 227425, 002230 ஆகிய காசோலைகள் ஏற்கனவே அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ரூ.3,96,659/— மற்றும் ரூ.3341/— ரூபாய்கான வவுச்சர் ஏற்கனவே அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 81 பிரிவு விசாரணை அதிகாரி விசாரணை செய்ததில் நான் கொடுத்தவாக்குமூலம் **அ.சா.ஆ.17** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அந்த சொசைட்டியில் மேற்பார்வையாளராக பணிபுரிந்த செல்வம் என்பவரை எனக்கு தெரியும். மேற்படி சொசைட்டியை பொறுத்தவரை எந்த காசோலை வந்தாலும் அதை காசாக்க வேண்டாம் என லெட்டர் கொடுத்தவிவரம் எனக்கு தெரியாது. மேற்படி காசோலை யை ரொக்கமாக கொடுக்காமல் கணக்கில் வரவு வைப்பதற்கு கவரிங் லெட்டர் கொடுத்தால் மேற்படி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட வேண்டும் என்றால் சரிதான். 06.10.2015 ல் இரண்டு காசோலைகளில் குறிப்பிட்டரூ.4 லட்சத்தை எதிரியிடம் ரொக்கமாக செலுத்தாம்ல் நேரடியாக அந்த சொசைட்டியின் கடன் கணக்கில் இரண்டு வவுச்சர்கள் மூலம் வரவு வைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மேலாளர் காசோலையில் Cash pay என குறிப்பிட்டதால் தான் நான் அதன்படி செயல்பட்டேன். காசோலைகள் பணமாக்கப்பட்ட பின் அவற்றை எங்கள் வங்கியில் தான் பாதுகாத்து வந்தோம். பிரிவு 81 விசாரணை அதிகாரி எங்களது மேலாளர் மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொசைட்டியில் பணிபுரியும் செல்வம் என்பவர் பணம் கொடுக்கலாம் என்பது குறித்து லெட்டர் கொடுத்தவிவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

மறு விசாரணை

இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No.146/2018**
**Deposition of witness for prosecution –PW–10**

| | | |
|---|---|---|
| Name | : | விஜயலிங்கம் |
| Father Name | : | காங்கேஷ் |
| Village | : | திருப்பாலைக்குடி |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | மேலாளர் |
| Religion | : | |
| Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 30th day of September 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி திருவாடானை கிளையில் வட்ட கள மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி திருவாடானை கிளையில் மேலாளராக பணிபுரிந்து வந்தேன். அப்போது எங்களது வங்கி கூட்டுறவு சங்கத்தில் 13 சங்கங்கள் எங்களுடைய கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்தது. 06.10.2015 ல் அரசூர் தொடக்க வேளாண்மை கடன் கூட்டுறவு சங்கத்தில் எதிரி ராஜன் எழுத்தராகவும் இறந்து போன எதிரி லிங்கப்பன் செயளாலராகவும் பணிபுரிந்து வந்தார்கள். 06.10.2015 ம் தேதி சேமிப்பு கணக்கு மூலம் ஒரு காசோலை ரூ.2,00,000/–மும் விவசாய நகை காசு கடன் மூலம் ரூ.2,00,000/–ஒரு காசோலையும் ஆக மொத்தம் ரூ.4,00,000/–மும் எதிரி ராஜன் பெற்றிருந்த நிலையில் அன்றைய தினமே மேற்படி ரூ.4 லட்சத்தை கடன் கணக்கில்எங்களுடைய வங்கியில் வரவு வைக்கப்பட்டது. அதன்பின் 14.10.2015 ம் தேதி விவசாய நகை காசு கடன் மூலம் ரூ.2 லட்சம் காசோலை மூலமாக ரொக்கமாக எதிரி ராஜன் எடுத்து சென்றுள்ளார். எதிரிக்கு எடுத்த அந்த வங்கி காசோலை எண் 227426, 227425, 002230 ஆகிய காசோலைகள் **அ.சா.ஆ.14** ஆகும். ரூ.3,96,659/– மற்றும் ரூ.3341/–

ரூபாய்கான வவுச்சர் **அ.சா.ஆ.15** ஆகும். 81 பிரிவு விசாரணை அதிகாரி விசாரணை செய்ததில் நான் கொடுத்தவாக்குமூலம் **அ.சா.ஆ.16** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் குறிப்பிட்ட தலா ரூ.2 லட்சத்திற்கான இரண்டு காசோலைகள் 06.10.2015 அன்று என் வசம் கலெக்சனுக்கு வந்தது. அந்த காசோலையில் குறிப்பிட்ட தேதிகள் முறையே 01.10.2015 மற்றும் 05.10.2015 என்றால் சரிதான். மேற்படி காசோலைகளில் அந்த காசோலைகள் பாஸ் ஆகப்பட்ட தேதி மற்றும் கலெக்சன் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அரசனூர் சொசைட்டியை பொறுத்தவரை காசோலை ஏதும வந்தால் அதை பணமாக கொடுக்ககூடாது என கள அலுவலர் செல்வம் எனக்கு அறிக்கை சமர்ப்பித்தார் என்றால் சரிதான். மேற்படி அறிக்கைபடி சம்பந்தப்பட்ட சொசைட்டியில் எந்த காசோலை வந்தாலும் பணமாக கொடுக்ககூடாது என்றால் சரிதான். மேற்படி செல்வம் என்பவர் கொடுத்த அறிக்கை எப்போது வந்தது என்றால் இந்த காசோலை பணமாக்கப்பட்டதற்கு 20 நாட்களுக்கு முன்பு வந்தது என்றால் சரிதான். மேற்படி காசோலைகள் பணமாக்க 06.10.2015 ல் என்னிடம் வரும்போது செல்வம் அதை பணமாக கொடுக்கும்படி என்னிடம் அறிக்கை சமர்ப்பித்தார். பிரிவு 81 விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்யும் போது மேற்படி செல்வம் கொடுத்த அறிக்கை பற்றிய விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை. அரசனூர் கூட்டுறவு வங்கியில் எந்த காசோலை வந்தாலும் அதை கவரிங் லெட்டர் கொடுத்து நேரடியாக மேற்படி தொகையை நேரடியாக குறிப்பிட்ட வங்கி கணக்கிற்கு அனுப்ப வேண்டும் ரொக்கமாக கொடுக்ககூடாது என்றால் சரிதான். பிரிவு 81 விசாரணை அதிகாரி திரு அருணகிரி என்பவர் விச்ாரணை அறிக்கை சமர்ப்பித்து அதன்படி ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு பரிந்துரை செய்தார்என்றால் சரிதான். மேற்ப்டி 81 விசாரணை அதிகாரி திரு அருணகிரி அவர்கள் கொடுத்த பரிந்துரையின் படி செல்வம் என்பவர் கொடுத்த அறிக்கையை மீறி நான் மோசடிக்கு துணை போனதாகவும் வங்கி கணக்கில் கொடுக்கப்பட்ட காசோலையை குறிப்பிட்ட கணக்கிற்கு நேரடியாக அனுப்பாமல் ரொக்கமாக கொடுத்தது சம்பந்தமாக என்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பரிந்துரை செய்தார் என்றால் சரிதான். காசோலைகள் அனைத்திலும் Pay Cash என்று நான் தான்

கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.15 வவுச்சரில் மேற்படி ரூ.4 லட்சத்தை எதிரி கையில் எடுத்துச்செல்லாமல் திரும்ப எங்கள் வங்கியில் அந்த தொகையை கடன் கணக்கில் செலுத்தி விட்டார் என்றால் சரிதான். அதனால் எதிரி மேற்படி ரூ.4 லட்சத்தை பொறுத்து எந்த கையாடலும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி எதிரி ரூ.4 லட்சத்தை கடன் கணக்கில் செலுத்திவிட்டார் என்று பிரிவு 81 விசாரணையில் நான் தெரிவித்தேன் என்றால் சரிதான். மேற்படி சொசைட்டியில் பணிபுரிந்து இறந்து போன லிங்கப்பன் செயலாளர் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி லிங்கப்பன் 15.10.2015 ல் மேற்படி சொசைட்டியில் அதிகாரிகள் சோதனை செய்ய சென்ற போது கணக்குகளை ஒப்படைக்காமல் தலைமறைவாகிவிட்டார் என்ற விசயம் எனக்கு தெரிய வந்தது. பிரிவு 81 விசாரணை அதிகாரி முன் மேற்படி லிங்கப்பன் என்பவர் ஆஜராகவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கை பொறுத்த அளவில் அதிகாரிகளின் அறிவுரைப்படி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேறப்டி காசோலைகளில் உள்ள கையெழுத்து குறித்து Expert opinion கருத்துக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.